தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 172

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணுதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: மார்கழீ 16உ வியாழன் (31—12—53) ☆ ★ ★ வெளியூர்: மார்கழீ 17உ வெள்ளி (1—1—54)

'கல்வித் திட்டம்-பெண்கள் எதிர்ப்பு!'

—(:)—

'தேர்தலில் காங்கிரஸ் நிச்சயம் மண்ணைக் கவ்வும்!'

—[o]—

"காங்கிரஸ் தோற்பதை ஒரு பொருட்டாக மதிக்க மாட்டேன்"!

'... ஞல் ஆற்றல் படைத்த வேறு கட்சி இல்லையே என்றுதான் கவலை'

திட்டத்தை வாபஸ் பெற ஓமந்தூரார் கோரிக்கை

சென்னை, டிச. 31—

"புதிய கல்வித் திட்டத்தை, கிராமப்புற மக்கள் எதிர்க்கிருர்கள். பெண்கள் கூட அந்த எதிர்ப்பில் பங்கு கொண்டுள்ளார்கள். அவர்கள் சர்க்காரைக் குறை கூறுவதோடு, சர்க்காருக்கு உள்ளெண்ணமும் கற்பிக்கிருர்கள்."

"புதிய கல்வித் திட்டத்தை மேலும் நடைமுறையில் இருக்கச் செய்தால், கண்டிப்பாக அடுத்தத் தேர்தலில், காங்கிரஸ் படுதோல்வி அடையும் என்பதை நான் சர்க்காருக்கு எச்சரிக்கிறேன்."

"தொடர்ந்தாற் போல் நான் கிராமப் பகுதிகளில் பிரயாணம் செய்வதால், கிராமத்தவர்களின் மனப்பாங்கும், இத்திட்டத்தில் அவர்கள் கொண்டுள்ள எதிர்ப்புணர்ச்சியும் எனக்கு நன்ருகத் தெரியும். இந்தத் திட்டத்தைத் திணித்ததின் மூலம், நீவிர் அவசியமில்லாமல் தொல்லையை விலைக்கு வாங்கிக் கொண்டீர். இதனால், ஒரு தனி மனிதரின் கௌரவம் மட்டுமே பாதிக்கப்படுவதாக இருந்தால் அலட்சியமாக இருந்து விடலாம். ஆனால், ஒரு கட்சியின் கவுரவமே தொலைந்து போவதாக இருக்கிறது."

"இனியும், இது விஷயத்தில் பிடிவாதம் காட்ட வேண்டாமென்று ஆச்சாரியாரைக் கேட்டுக் கொள்கிறேன்."

"கல்வி போதனை தொழில் பயிற்சியோடு இணைந்திருக்க வேண்டுமென்பது எனக்கு உடன்பாடேயாயினும், அதற்கான சூழ்நிலையும், வசதிகளும் செய்யப்பட வேண்டுமென்று கூறுகிறேன். ஆனால், நல்ல சூழ்நிலையும், தேவையான வசதிகளும் இல்லாதத் தருணத்தில் திட்டம் நுழைக்கப்பட்டு இருக்கிறது."

"ஒவ்வொரு கட்சியும், பொதுமக்கள் ஆதரவைப் பெற, ஒன்ருேடு ஒன்று போட்டியிட்டுக் கொண்டு இருக்கின்றன. இத்தகு சூழ்நிலையில் புதிய கல்வித் திட்டம் துவேஷத்திற்கு ஊக்கமூட்டுகின்றது."

"சர்க்காரை நடத்தவும், மக்களுக்கு சேவை செய்யவும் வேறு மாற்றுக் கட்சிகள் இருக்குமானல், காங்கிரஸ் தோற்றுப்போவதை நான் ஒருபொருட்டாகக் கொள்ளமாட்டேன். ஆனால், காங்கிரஸ் நீங்கலாக, மக்களுக்குத் தொண்டு புரிய, இன்று வேறு ஒரு கட்சியும் இல்லை."

—இவ்வாறு, நேற்றைய மேல்சபைக் கூட்டத்தில், டாக்டர் பி. வி. செரியன் தலைமையில் நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்மீது பேசுகையில், முன்னாள் பிரதமர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் குறிப்பிட்டார்.

பாடத் திட்டம் வகுக்க குழு நியமனம்

சென்னை, டிச. 30—

பருலேக்கர் குழு செய்துள்ள சிபாரிசை அனுசரித்து, எலிமென்டரி பள்ளிக் கூடங்களுக்கு, திருத்தி அமைக்கப்பட்ட பாடத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக சென்னை சர்க்கார் ஒரு கமிட்டியை நிறுவியுள்ளது.

கல்வி இலாகா உதவி டைரக்டர் எம். டி. பால், கல்வி இலாகா டெபுடி டைரக்டர் என். டி. சுந்தர வடிவேலு, பெரியநாயக்கன்பாளையம் ராமகிருஷ்ண வித்யாலய போதன பயிற்சிக் கல்லூரி பிரின்சிபால் கே. அருணசலம், சென்னை இந்து தியாலஜிகல் முன்னாள் தலைமை ஆசிரியர் கே. ரங்கசாமி அய்யங்கார், தென்னிந்திய ஆசிரியர் யூனியன் தலைவர் எஸ். நடராசன், திருச்சிற்றம்பலம் பயிற்சிப் பள்ளி எம். அருணசலம், சென்னை செயின்ட் கிறிஸ்டாபர் பெண்கள் பயிற்சிப் பள்ளி திருமதி சாமுவேல், சென்னை சர்க்கார் ஆதார எலிமென்டரி கல்வி கௌரவ ஆலோசகர் ஜி. ராமச்சந்திரன் ஆகியோர் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

குறைந்து விட்டது!

லண்டன், டிச. 30—

இந்தியாவுடன் பிரிட்டன் ஐக்கிய வர்த்தகம் குறைந்து விட்டதாக சென்ற 11 மாத புள்ளிவிவரங்களிலிருந்து தெரிய வருகிறது.

'வகுப்பு நீதியை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும்'

"அதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்த சென்னை சர்க்கார் முயற்சிக்க வேண்டும்"

வகுப்பு நீதியின் தேவையை டி. புருஷோத்தமனர் வலியுறுத்துகிருர்

"யூனியன் சர்க்கார் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தப் போவதாகத் தெரிகிறது. குறிப்பிட்ட வகுப்பு மக்களின் எண்ணிக்கைக்கேற்ப, உத்தியோகங்கள் அளிப்பதற்கும், கல்லூரிகளில் சேர்ப்பதற்கும் மாநில சர்க்காரால் சட்டமியற்ற முடியாமல் இந்திய அரசியல் சட்டத்தில் தடையாக இருக்கின்ற 15 (5), 16 (6), 29 (3) ஆகிய சட்டப் பிரிவுகளைத் திருத்தவேண்டுமென்று, யூனியன் சர்க்காருக்கு சென்னை சர்க்கார் சிபார்சு செய்யக் கோருகிறேன்."

"எல்லா வகுப்பார்களும் ஒரே காலத்தில் முன்னேற்றம் பெறுவதற்கு, இத்தகையதோர் ஏற்பாடு மேலும் சிறிது காலத்திற்கு இன்றியமையாததாகிறது."

—இவ்வாறு, 30—12—53-ல், சென்னை மேல்சபையில் நடைபெற்ற வரவு—செலவுத் திட்ட விவாதத்தின்போது, டி. புருஷோத்தமர் கூறினர்.

'பணக்காரன்' தடுக்கப்பட்டான்!

'நல்ல முடிவு' போன்றதுதான் 'பணக்காரனு'ம்!

சென்னை, டிச. 30—

சென்னையில் எந்தப் பகுதியிலும், 'பணக்காரன்' என்ற பெயரிய தமிழ்க் கூத்தை நடிக்கக் கூடாது என, சென்னை சர்க்கார் தடை விதித்திருக்கிறது.

கடந்த செப்டம்பர் மாதம் 13-ந் தேதி, கபாலி டாக்கிசுக்கு எதிரில் உள்ள மைதானத்தில் நடிக்கப்பட்ட, 'பணக்காரன்,' அவதூறு உள்ளதாகவும், மானக்கேடானதாக இருப்பதாகவும் சர்க்கார் கருதுகிறது என்றும், ஏற்கனவே சர்க்காரால் தடுக்கப்பட்டுள்ள, 'நல்ல முடிவு,' 'முருகன்' என்ற இரு கூத்துக்கும் இதற்கும் வித்தியாசம் எதுவும் இல்லை என்றும் சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

மில் துணிகளுக்கு தடை

ஆந்திர சர்க்கார் நடவடிக்கை

கர்நூல், டிச. 30—

ஆந்திர அரசாங்கம், இப்போது அங்கு தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகள் தீரும்வரையில், மில்துணிகளை மாநிலத்திற்குள் தடை செய்வது குறித்து ஆராய்ந்து வருகிறது.

சர்க்கார் தேவைகளுக்குக் கைத்தறித் துணி வாங்குவது குறித்தும் ஆந்திர சர்க்கார் ஆராய்ந்து வருகிறதென, சட்டசபையில் கேட்கப்பட்ட கேள்விக்கு தொழில் மந்திரி பட்டாபிராம ராவ் பதிலளிக்கையில் கூறினர்.

கட்சி மாறினவர் கண்டதுண்டமாக வெட்டப்பட்டாராம்!

—(:)—

கட்சி நீதிமன்ற முடிவு — நிறைவேற்றப்பட்ட அழகு!

திருநெல்வேலி சதி வழக்கு பற்றி ஆச்சாரியார் தகவல்

சென்னை, டிச. 30—

"கோரமான கொலை ஒன்று செய்ததாக வழக்கு; கட்சியை விட்டுச்சென்ற ஒருவர் கண்டதுண்டமாக வெட்டப்பட்டார்; அங்கங்கள் மூலைக்கு மூலை தூக்கி எறியப்பட்டன; இதற்குமேல் எதையும் நான் கூற விரும்பவில்லை."

—இவ்வாறு, இன்று கூடிய மேல் சபையில், "திருநெல்வேலி சதி வழக்குகளில் சம்பந்தப்பட்டு தண்டனைபெற்ற பாலதண்டாயுதத்தின் தண்டனையை குறைக்க சர்க்கார் முன்வருமா?" என்று, தோழர் ஆதித்தன் கேட்ட கேள்விக்கு, முதன் மந்திரி ஆச்சாரியார் பதிலளிக்கையில் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது:—

"அரசாங்க அதிகாரத்தை, எதிரிகள் தாங்களே மேற்கொண்டு, ஒரு நபரைத் தாங்களே விசாரித்துத் தண்டிக்க முற்படுவது மிகவும் மோசமான காரியம்; வழக்கை இப்போது கவனிப்பதற்கில்லை; எதிரிகள் தண்டிக்கப்பட்டு விட்டனர்; ஆனால், காலம் வருமபோது, சர்க்கார் இந்த வழக்கையும் பரிசீலனை செய்யத் தயங்க மாட்டார்கள்; பரிசீலிக்காத அளவுக்குக் கடின நெஞ்சம் படைத்தவர்களல்ல, சர்க்கார்."

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 31—12—53 வியாழன்

வெற்றி கிட்டுமா?

விற்பனை வரி, ஒரு விசித்திரமான வரி. நமது மாநில சர்க்காரின் வரி இனத்தில் பெரும் பகுதி வருமானம், விற்பனை வரி மூலம் கிடைப்பதுதான்.

இந்த வரியினால் பாதிக்கப்படுகிறவர்கள் வியாபாரிகள் அல்ல; இதனால் செப்பாலடித்தக் காசு அளவும் அவர்களுக்கு நஷ்டமில்லை. விற்பனை வரி பளு முழுமையும் சுமக்க வேண்டியவர்கள், ஏழை எளியவர்களான பொது மக்களேயாவர்.

வியாபாரிகள், வியாபாரிகள் என்ற முறையில் அவர்கள் பாதிக்கப்படுவதில்லையானாலும், பண்டம் வாங்கி உபயோகிக்கின்றவர் என்ற முறையில், அவர்களையும், இந்த வரி பாதிக்கத்தான் செய்கிறது. விற்பனை வரியை காலணா காலணாவாக வசூலிப்பதிலும், ஒரு மொத்தமாக சர்க்கார் தண்டலாதிபதியிடம் சேர்ப்பிப்பதிலும், அதற்கான கணக்குகளைக் கண்ணாடி போல் விளக்கமாக வைத்துக் கொள்ளுவதிலும், வியாபாரிகள் அனைவரும் அதிகமான தொல்லைக்குள்ளாகிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மைகளாகும்.

கணக்கு அமைப்பில் ஏற்படுகின்ற பிணக்கின் காரணமாக, தன்னையும் அறியாமல் ஏற்பட்டுவிடுகிற சிறு பிழைக்கெல்லாம்கூட, சர்க்கார் தண்டலாதிபதிகளிடம், வியாபாரிகள் பயந்து நடுநடுங்க வேண்டியதாக இருப்பதும், குற்றவாளிகளாக்கப்பட்டு தண்டனைக்குள்ளாவதும், அனுபவத்தில் நாம் கண்டு வரும் உண்மையாகும்.

இந்த ஒன்றை நினைத்தாலே, விற்பனை வரி ஒழியத்தான் வேண்டும் என்ற முடிவிற்கு, ஒவ்வொரு வியாபாரியும், கட்டாயம் வந்தே தீருவார் என்பதில் சந்தேகமில்லை.

இந்த விற்பனை வரி விஷயத்தில், பொதுமக்களிடத்திலிருந்து வரி வசூலித்துக் கொண்டு, அதை வேண்டுமென்றே கணக்கில் காட்டாமல் 'சுவாகா' செய்துவிடுகிற சில பல வியாபாரிகளும் உண்டு. இந்த ஒருவர் இருவர் விவகாரத்தை அனைவருக்கும் பொதுவானதாக வைத்துப் பேசுவது கூடாது—முறையுமல்ல அது. எல்லாத் துறைகளிலும் 'கயவர்' இருப்பது போலவே வியாபாரிகள் கூட்டத்திலும் உள்ளனர் என்று, அதை அலட்சியப்படுத்தி விட்டுத்தான் விஷயத்தை நோக்க வேண்டும்.

இப்பொழுது விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு வரும் விற்பனை வரி, பல கட்டங்களில் வசூலிக்கப்படுகின்றன. அதாவது, பொருள் உற்பத்தியாகிற இடத்திலிருந்து, இறுதியில், உபயோகிக்கின்ற பொதுமக்கள் கையை அடைகிற வரையில், ஒரு பொருள், இடையில் பல கை மாறுகிறது. ஒவ்வொரு கட்டத்திலும் வரி வசூலிக்கப்படுகிறது—நடைமுறையிலுள்ள விற்பனை வரி ஏற்பாட்டின்படி!

பொதுமக்கள் மடியைத் தடவும் இந்த அக்கிரம வரியை முதல் முதலாக அமுலுக்குக் கொண்டு வந்தவர்கள் இராசகோபாலாச்சாரியார் அவர்களேயாவர். 1938-ல் விற்பனை வரியை நடைமுறைக்குக் கொண்டுவந்தகாலே, அதற்குப் பலமான எதிர்ப்புகள் கிளம்பத்தான் கிளம்பியது அந்த எதிர்ப்பில் நமது தலைவர்களுக்கும் பங்குண்டு.

அப்பொழுது, ஆச்சாரியார் பேசிய பேச்சு மிக மிக விசித்திரமானதாக இருந்தது. 'இது உங்களை பாதிக்காது; நீங்கள் கொடுக்கப்போவது ஒரு தம்பிடியோ, இரண்டு தம்பிடியோதான்; வியாபாரிகள்தான், எங்களிடம் மொத்தமாகச் சேர்த்துத் தரவேண்டியவர்கள்; அவர்களுக்குத்தான் எல்லாத் தொல்லைகளும்,' என்று, பொதுமக்கள் கூட்டங்களிலே பேசுவார், ஆச்சாரியார்!

வியாபாரிகளைப் பார்த்து, 'இந்த வரியால், உங்களுக்கு ஒரு காலணா நஷ்டமும் கிடையாது; நீங்கள், வெறும், சர்க்கார் பில் கலெக்டர்களாக இருந்து, பொதுமக்களிடம், [illegible] வசூலித்துத் தர வேண்டியதுதான்,' என்று, ஆச்சாரியார் கூறுவார்.

இதுபோன்று விசித்திரமாகவெல்லாம் விற்பனை வரியை ஆதரித்து ஆச்சாரியார், அனைவரையும் திருப்தியடுத்தும் போக்கில், ஏமாற்றும் பேச்சு பேசி வந்திருக்கிறார் அந்தக் காலத்தில்!

தம்பிடியிலே தொடங்கிய விற்பனை வரி, இப்பொழுது காலணாவிற்கு வந்து நிற்கிறது, பொது மக்கள் அறிந்து கொள்ள முடியாத வண்ணம், அவர்களை இந்த வரி ஒட்டாண்டியாக்கிக் கொண்டு இருக்கிறது!

காலணா, காலணாவாகப் பொதுமக்களிடமிருந்து வசூலித்து, ஆயிரம் இரண்டாயிரம் என்று ஒரு மொத்தமாக, ஒரே காலத்தில், சர்க்கார் தண்டலதிகாரியிடம் கட்டியழ வேண்டிய பொறுப்பு, வியாபாரிகளையே சார்ந்ததாகும். இதில் வியாபாரிகளுக்குள்ள அச்சத்தையும் நெருக்கடியையும், பொறுப்பையும் நாம் அறியாதவர்கள் அல்ல.

விற்பனை வரியை, பல கட்ட வசூல நிலையிலிருந்து ஒரு கட்ட வசூல நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்று சர்க்கார் வரி முறை கற்றவர், பலரும் வற்புறுத்துகின்றனர். இதையே, சென்ற ஞாயிறு ஈரோடில் கூடிய சென்னை மாநில வியாபாரிகள் மாநாட்டினரும் தீர்மானித்துள்ளனர். வியாபாரிகளின் தீர்மானம் வரவேற்கத்தகுந்ததேயாகும்.

மக்களாட்சி முறைக்கு மதிப்பளிக்கும் சர்க்காராக ஆச்சாரியார் சர்க்கார் இருக்குமானால், வியாபாரிகள், இதுவகையில் முயலுவதற்கு முன்பாகவே, தானாகவே முன்வந்து, விற்பனை வரியை ஒரு கட்ட வசூல் நிலைக்குக் கட்டுப்படுத்தி இருக்கும். ஆனால், ஆச்சாரியார் சர்க்காருக்கும், ஜனநாயகக் கோட்பாட்டிற்குந்தான், இரவுக்கும்-பகலுக்கும் உள்ள வித்தியாசமாயிற்றே! அதுவா, வியாபாரிகளின் ஒருமித்த முடிவுக்குச் செவி சாய்க்க முன்வரப்போகிறது?

விற்பனை வரி விஷயமாக சட்ட சபை உறுப்பினர்களும் சட்ட சபையில் சர்க்காரை சாடியிருக்கிறார்கள். அதற்குப் பதில் கூறிய நிதி அமைச்சர் வேடிக்கையான சமாதானங்களை எல்லாம் கொட்டி அளந்திருக்கிறார்.

ஒரு முனையில், அதாவது முதல் முதலாக விற்பனையாகும் கட்டத்தில் மட்டும் விற்பனை வரி வசூலிக்கப்பட வேண்டும் என்ற உறுப்பினரின் விருப்பத்திற்கு மறுப்பாக, 'பல வியாபாரிகள் வரி கட்டாமல் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். பல கட்ட விற்பனை வரியினால் ஏதாவது ஒரு கட்டத்தில் தப்பித்துக் கொண்டவர்கள் சுலபமாக மாட்டிக் கொள்ளுகிறார்கள். எனவே, ஒரு கட்ட விற்பனை வரியினால் வரி வசூல் குறைந்து விடும்,' என்று, வியாபாரிகள்மீது பழி சுமத்தியும், விற்பனை வரி தண்டலதிகாரிகளின் திறமையில் ஐயம் கொண்டும் அமைச்சர் பேசியிருக்கிறார்.

உணவுப் பொருள் மீதாவது வரியைக் குறைக்க வேண்டும் என்று கூறப்பட்டதற்கும், மொத்தம் உற்பத்தியாகும் உணவுப் பண்டங்களில் 25 சதவிகிதம்தான் விற்பனையாகிறது என்றும், மீதம் உற்பத்தியாளர்களே உண்டுவருகிறார்கள் என்றும், இந்த 25 சதவிகிதத்திலும், 10-லிருந்து 15 சதவிகிதம்தான் சில்லரை வியாபாரிகளால் விற்கப்படுகிறது என்றும், இதை வாங்கும் மக்களும் நகரப் பகுதியில்தான் உள்ளனர் என்றும், கிராமிய மக்களைக் காட்டிலும் நகர மக்கள் சுமாராகப் பணம் படைத்தவர்கள் என்றும், எனவே, அவர்கள் கொடுக்கும் வரி, மொத்த விற்பனை வரியில் மிகமிகக் குறைவான பகுதியாகும் என்றும், நிதி அமைச்சர் கதை படித்திருக்கிறார்!

நகர மக்களிடமிருந்து வரி வாங்குவதற்கு மற்றொரு விசித்திரமான காரணத்தையும் நிதி அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். அதாவது, 'முன்பு குடித்துக் கொண்டிருந்தவர்கள், அவர்கள் குடிக்கும் குடிக்கு வரி செலுத்திக்கொண்டு இருந்தவர். மதுவிலக்குக்குப் பிறகு அவர்கள் எந்த வரியும் செலுத்துவதில்லை; எனவே, அவர்கள், உணவிற்காக விற்பனை வரி செலுத்துவது நியாயமாகும்,' என்று விபரீத நியாயம் பேசுகிறார், அமைச்சர்!

மதுவிலக்கிற்கு முன்பாகக் குடிப்பவர் தொகை, நகரப்புறத்தில் மொத்த மக்கள் தொகையில் 10 சதவிகிதம் கூட இருக்காது. அமைச்சர் கூற்றுப்படி, மதுவிலக்கினால் லாபமடைந்தவர்கள் குடிப் பழக்கத்தை மறந்த 10 சதவிகிதத்தினராகத்தான் இருக்க முடியும். மந்திரியார் காட்டுகின்ற முறைப்படி உணவுப் பொருள் மீது விற்பனை வரி வசூலிப்பதாக இருந்தால், இந்தக் குடிப் பழக்கத்தைவிட்ட 10 சதவிகிதத்தினரிடம் மட்டுமேதான் வசூலிக்க வேண்டும். இதுதான் நியாயம்.

குடிப் பழக்கத்தை விட்டுவிட்ட நகரப்புற 10 சத மக்களிடத்திலிருந்து மட்டும், உணவுப் பொருள் மீது விற்பனை வரி வசூலிக்க மந்திரியார் முனைவதானால், அதில், நமக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. இந்த நியாயத்தை நடைமுறைக்குக் கொண்டுவர ஏதாவது சிறந்த ஏற்பாட்டை நிதி அமைச்சர் செய்திருக்கிறாரா என்பது தெரிய வேண்டும். அப்படி ஒன்றும் ஏற்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. அத்தகையதோர் ஏற்பாடு செய்வதும் முடியாத காரியம்.

என்றும் குடிப் பழக்கமற்ற 90 சத மக்களிடம், உணவுப் பொருள்மீது விற்பனை வரியை வசூலிக்க, மந்திரிக்கு, அவர் கூற்றுப்படி, எந்தவித நியாயமும் இருக்கவில்லை. ஆனால், உணவுப் பொருள்மீது விற்பனை வரியை வசூலிப்பதில், 'இவர்கள் குடிப் பழக்கத்தை விட்டவர்கள்; இவர்கள் என்றும் குடியாதவர்கள்,' என்று பாகுபாடு செய்து வசூலிப்பதாகக் காணோம்!

உணவுப் பொருளுக்காகக் குடியை மறந்தவர், விற்பனை வரி செலுத்துவது நியாயமானது என்று வாதிடுகிற மந்திரிக்கு, குடியை என்றும் தீண்டியறியாத 90 சத விகிதத்தினர் உட்கொள்ளும் உணவுப் பண்டங்கள்மீது வரி விதிப்பது அக்கிரமமாயிற்றே என்பதும் தெரிந்திருக்க வேண்டும்.

ஆனால், இத்துறையிலும், அவர் புத்தி பெற்றிருப்பதாகக் காணோம்!

காங்கிரஸ் சர்க்காரின் போக்கைக் காணுகின்றபொழுதுதான்; ஈரோடு மாநாட்டு முடிவிற்கு வெற்றி கிட்டுமா (?) என்று ஐயம் நமக்குப் பிறக்கிறது. சகல சம்பத்துக்கும் இருப்பிடமாக உள்ள காமதேனு(!)வை காங்கிரஸ் சர்க்கார், வியாபாரிகள் தீர்மானிக்கிறார்கள் என்பதற்காக விட்டுவிடுவார்களா என்று நாம் சந்தேகிக்கிறோம்.

தூத்துக்குடி நிதிக்கு ரூ 2000

—[o]—

சேலம் மாவட்ட தி. மு. கழகம் முடிவு

27—12—53-ல், செவ்வாய்ப்பேட்டை, கழகக் கட்டடத்தில் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் மாவட்ட தி. மு. கழகம் கூடியது அதுபோது சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக 2-வது மாநாட்டை சேலத்திலேயே நடத்தலாமெனவும், சேலம் மாவட்ட தி. மு. கழகக் குழுவே மாநாட்டு வரவேற்புக் குழுவாக இருக்கலாமென்றும்; சேலம் மாவட்ட தி. மு. கழகத்திற்கு ஒரு வாடகைக் கட்டிடம் சேலத்தில் வைத்துக் கொள்ளலாமென்றும்; சேலம் மாவட்ட தி. மு. கழக வரவு—செலவு கணக்குகளை [illegible] 6-12-53ல் [illegible] நாடக வரவு—செலவுகளும படிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதென்றும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தூத்துக்குடி சதிவழக்கு நிதிக்காக ரூ. 2,000 அனுப்பி ஜனவரி இறுதிக்குள் சேர்த்து பொதுச்செயலாளர் அண்ணாதுரையிடம் ஒப்படைப்பதற்கு முயற்சி எடுத்துக்கொண்டு நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

குறித்துக் கொள்ளுங்கள்

புதுடில்லி, டிச. 30—

1. இந்திய ரயில்வேக்களில், இதுவரை சுமார் 10,000 மூன்றாம் வகுப்பு வண்டிகளில், மின்சார விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளன; சுமார் 10,200-க்கு மேற்பட்ட வண்டிகளில் வெளிச்ச வசதிகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.
2. இந்தியாவில், மத்திய சர்க்காருக்குச் சொந்தமான காடுகளின் மொத்த விஸ்தீரணம் சுமார் 3,135 சதுர மைல்களாகும்; இவற்றின் அபிவிருத்திக்காக ஐந்து ஆண்டுத் திட்டத்தின்கீழ், 1953 மார்ச் 31-ந் தேதி வரை மொத்தம் 10,56,000 ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது.
3. வெட்டுக்கிளி ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக, இந்தியா சர்க்கார் ஆண்டுதோறும் சுமார் 19 லட்சம் ரூபாய் செலவழித்து வருகின்றனர்.
4. 1953-ம் ஆண்டின் தொழில்கள் (அபிவிருத்திக்கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ், புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள 63 தொழில் நிலயங்களுக்கு லைசென்சுகள் வழங்கப்பட்டிருக்கின்றன; இவற்றின் மொத்த மூலதனம் சுமார் 18.5 கோடி ரூபாயாகும்
5. கல்கத்தாவில், ஜாதல்பூரிலுள்ள தேசிய இயந்திரக் கருவிகள் உற்பத்திச் சாலையில் 1952—53-ல், சுமார் 18.15 லட்சம் ரூபாய் பெருமானமுள்ள இயந்திரக் கருவிகள் உற்பத்தி செய்யப்பட்டன; 1951—52-ல் சுமார் 14.02 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள கருவிகள் உற்பத்தி செய்யப்பட்டன.
6. 1952—53-ம் ஆண்டில், உத்தரப் பிரதேசத்தில் சுமார் 5,350 மணங்கு அபின் உற்பத்தியாயிற்று; மத்திய பாரத்தில் சுமார் 6,200 மணங்கும், ராஜஸ்தானில் சுமார் 4,350 மணங்கும், ஹிமாசலப் பிரதேசத்தில் சுமார் 90 மணங்கும் உற்பத்தி செய்யப்பட்டது.

மலை ஜாதியினருக்கு மானிய உதவி

புதுடில்லி, டிச. 30—

மலை ஜாதி வகுப்பினருக்கு மானியம் அளிக்கும் முறையை, பிரதம மந்திரியே நேரில் கவனிக்கவேண்டும் என்று, அஸ்ஸாம்—பீகாரிலுள்ள மலை ஜாதியினரின் பிரதிநிதிகளாக உள்ள பார்லிமெண்டு மெம்பர்கள் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

மானியமாக ஒதுக்கப்படும் தொகை சுரண்டப்பட்டு விடுவதைத் தடுக்கவேண்டியே இம்மாதிரி இவர்கள் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

தமிழ் எழுத்தாளர்கள் மாநாடு

சென்னை, டிச. 30—

சென்னை நகரில், பிப்ரவரியில் தமிழ் எழுத்தாளர்கள் மாநாடு நடைபெறும். இதை சென்னை முதல் மந்திரி சி. இராசகோபாலாச்சாரியார் ஆரம்பித்து வைப்பார்.

'கல்கி' ஆசிரியர் ஆர். கிருஷ்ணமூர்த்தி மாநாட்டிற்குத் தலைமை வகிப்பார்.

தூத்துக்குடி சதி வழக்கு:

'எவரையும் அடையாளம் காட்ட இயலாது!'

திருநெல்வேலி, டிச. 28—

தூத்துக்குடி தோழர்கள் கே. வி. கே சாமி, மற்றும் 94 பேர்கள் மீது போலீசார் தொடர்ந்துள்ள சதிவழக்கு விசாரணை 21—12—53ல், மீண்டும் விசேட முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. என். அரிகரய்யர் முன்பு நடைபெற்றது. அரசாங்கத் தரப்பில் அன்று 5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

சாட்சிகளை எதிரிகளின் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் பி. ஏ. தங்கசாமி, வி. என். கந்தய்யா, ஆர். தண்டபாணி (இரே. இளம்வழுதி) ஆகியவர்கள் குறுக்கு விசாரணை செய்தார்கள்.

பிராசிகியூஷன் தரப்பில் 33-வது சாட்சியாக தூத்துக்குடி அரசன் கம்பெனி நிருவாகி எர்னஸ்டு மாசிலாமணி விசாரிக்கப்பட்டார் அவர் கூறியதாவது:—

"15—7—53-ந் தேதி காலை சுமார் 10 மணிக்கு எனது அலுவலகத்திலிருந்தேன்; அப்போது திடீரென்று ஒரு சத்தம் கேட்டது; 'டிப்பு காபின்' அறையை நான் பார்த்தபோது, இரண்டு கண்ணாடிகள் துண்டு துண்டுகளாக உடைக்கப்பட்டிருந்ததைக் கண்டேன்; அன்று 6 பேர்கள் வீதியில் நிற்கக் கண்டேன்; கடையை மூடும்படி அவர்கள் சொன்னார்கள்; பின்னர் அவர்கள் மேற்கு நோக்கிச் சென்றனர்; போலீசு சப்-இன்ஸ்பெக்டரிடம் நான் புகார் செய்தேன்." எனக் கூறினார்.

34-வது சாட்சியாக சனார்த்தனசாரி விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது;—

"நான், தூத்துக்குடி கிருஷ்ண விலாஸ் காப்பிக் கடையின் நிருவாகி; 15—7—53-ந் தேதி காலை சுமார் 9-30 மணிக்கு சுமார் 20 பேர்கள் கொண்ட கூட்டம் கம்புகள், கற்களுடன் என் கடைக்கு முன்பு வந்து கற்களை கடைமீது வீசியது; 'ஆச்சாரியார் ஆட்சி ஒழிக; பார்ப்பனர்கள் ஒழிக' என்று கூச்சலிட்டது; நான் கடையின் கதவை மூடினேன்; கூட்டத்தினர், பெயர்ப் பலகையையும், விலை முறை அறிவிப்புப் பலகையையும் பிடுங்கி எறிந்து வீசினர்; 2, 3 கற்கள் தேவர்ஜி படத்தின் மீது விழுந்து, படத்தின் கண்ணாடி உடைந்தது; சேதம் விளைவித்தவர்களில் எவரையும் என்னால் அடையாளம் காட்ட இயலாது."

35-வது சாட்சியாக தூத்துக்குடி ஸ்ரீதர விலாசம் காப்பி சாப்பாட்டுக் கடை அதிபர் சுப்பராயன் போத்தி விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:-

"15—7—53-ந் தேதி காலை கூட்டத்தினர், 'வெட்டு, குத்து' என்று கூச்சல் எழுப்பிக் கொண்டு வந்தனர்; அக்கூட்டத்தினர் என் கடைமேல் கற்களை வீசினர்; அதனால் கூரையின் ஓடுகள் உடைந்தன; அதன் பின்னர், நான் கடையை அடைத்தேன்; கூட்டத்தினர், கடைக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த இரண்டு சைக்கிள்கள், ஒரு 'சைக்கிள் ஸ்டாண்டு' ஆகியவைகளை அப்புறப்படுத்தி, தெருவில் வீசினர்; இந்நிகழ்ச்சி குறித்துப் போலீசு இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்."

36-வது சாட்சியாக இரும்புக் கடை எல். நாகமணி நாடார் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது :—

"கூட்டத்தினர், என் கடையை அடைக்கச் சொன்னார்கள்; கடையில் கற்களை வீசினார்கள்; அவதூறாகப் பேசினார்கள்."

பின்னர், சாட்சி, 87-வது எதிரி அக்கூட்டத்திலிருந்ததாக அடையாளம் காட்டினார்.

37-வது சாட்சியாக கு. பரமார்த்தலிங்கம் பண்ணையார் சாட்சியம் கூறினார். அவர் கூறியதாவது :—

"நான், புதுக்கிராமத்தில் காவற்காரர் வேலை பார்த்து வந்தேன்; 15-7-53-ந் தேதி காலை, கூட்டத்தினர், புதுக்கிராமம் வந்து 'காஷியர்' வீட்டின் மீதும், ராமகிருஷ்ணய்யர் வீட்டின் மீதும் கற்களை வீசி எறிந்தனர்; இவைகளை, புதுக்கிராமம் பெருமாள் கோவிலுக்கு முன்புள்ள வாழைத் தோட்டத்திலிருந்து பார்த்தேன்; கூட்டத்தினரைக் கண்டு நான் பயந்தேன்; கூட்டத்தினர் என்னை அடிப்பார்களோவென்று பயந்துவிட்டேன்."

பின்னர், சாட்சி, 81, 56, 61-வது எதிரிகளை, முறையே அருணாசலம், தங்கராஜ், இரட்டைமுத்து என்று கூறி அடையாளம் காட்டினார்.

"பஸ்ஸை மறித்தவர்களை அடையாளம் காட்டத் தெரியாது."

22—12—53ல், மீண்டும் விசாரணை நடைபெற்றபோது, அரசாங்கத் தரப்பில் மேலும் 6 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டனர்.

38-வது சாட்சியாக தூத்துக்குடி டாக்டர் மரகதவேலு விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது :

"15—7—53ந் தேதி காலை 9 மணியிலிருந்து 10 மணி வரை நான் தூத்துக்குடி தெப்பகுளத் தெருவிலுள்ள என் வீட்டுப் பின்புறத்திலிருந்தேன்; அப்போது, என் வீட்டின் மீது கற்கள் வீசப்பட்டன; கற்கள் வீசப்பட்டதினால் என் வீட்டின் முன் ஜன்னலின் கண்ணாடிகள் உடைபட்டது; அதனால் எனக்கு ரூ 6—8—0 நட்டம் ஏற்பட்டது"

39-வது சாட்சியாக தூத்துக்குடி பால் கூட்டுறவு பண்டசாலையில் வேலை பார்க்கும் பால் விற்பனைக்காரர் அழகுத் தேவர் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது :

"15—7—53-ந் தேதி காலை 9 மணிக்கு புதுக்கிராமத்தில் இருந்தேன்; அப்போது 10, 15 பேர்கள் உள்ள ஒரு கூட்டம் கம்புகள், கற்களுடன் அங்கு வந்து வழக்கறிஞர் பத்மநாபய்யர் வீட்டுக் கதவை கம்பால் அடித்து, அவர் வீட்டில் கற்களை வீசிற்று; அக்கூட்டத்தில் 92-வது எதிரி கட்டில் கட்டி பொன்னு நாடாரைப் பார்த்தேன்."

40-வது சாட்சியாக தூத்துக்குடி கடைக்காரர் சி. சுந்தரம் பிள்ளை விசாரிக்கப்பட்டார்.

"15—7—53-ந் தேதி காலை 9 மணிக்கு நான், என் கடையிலிருந்தபோது கம்புகள், கற்களுடன் சுமார் 30 பேர்கள் உள்ள ஒரு கூட்டம், 'ஆச்சாரியார் ஒழிக; பார்ப்பான் ஒழிக' என்று கூச்சல் கிளப்பிக்கொண்டு என் கடைக்கு அருகே வந்து, பின்பு தெற்கு நோக்கிச் சென்றது; அதைப் பார்த்து கடையை அடைத்துவிட்டேன். பின்னர், இரண்டாவது கூட்டமொன்று அங்கு வந்து புதுக் கிராமம் சென்றது; அக்கூட்டத்தில் 88-வது எதிரி கே. துரைசாமி இருந்ததைப் பார்த்தேன்."

41-வது சாட்சியாக பஸ் டிரைவர் ராமகிருஷ்ண பிள்ளை விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது :—

15—7—53-ந் தேதி காலை 10 மணிக்கு, தூத்துக்குடி செவந்தாகுளத்திலிருந்து, நான் பஸ் ஓட்டிக்கொண்டு வந்தபோது, புதுக் கிராமம் பக்கத்தில் கம்புகளுடன் வந்த சுமார் 50 பேர்கள் உள்ள ஒரு கூட்டம், பஸ்ஸை நிறுத்தி, பஸ்ஸிலுள்ள பிராமணப் பிரயாணிகளைக் கீழே இறங்கச் சொன்னார்கள்; கூட்டத்திலிருந்தவர்களில் ஒன்றிரண்டு பேர்கள் பஸ்ஸில் ஏறி பஸ்ஸை சோதித்தனர்; பஸ்ஸை, மேலும் அன்றைய தினம் ஓட்டவில்லையென்று நான் உறுதி சொன்னதின் பேரில், கூட்டத்தினர் பஸ்ஸை ஓட்டிச் செல்ல அனுமதித்தனர்; பிறகு நான், பஸ்ஸை ஷெட்டில் கொண்டு போய் விட்டுவிட்டேன்; அதன் பிறகு பஸ்ஸை எடுக்கவில்லை; என்னால் பஸ்ஸை மறித்தவர்கள் எவரையும் அடையாளம் காட்ட முடியாது."

பின்னர் 42-வது சாட்சியாக கூலி மாடசாமித் தேவரும் 43-வது சாட்சியாக (வேலையில்லாதிருக்கும்) தங்கராசும் விசாரிக்கப்பட்டனர்.

சில சாட்சிகளை எதிரிகளின் வக்கீல்கள் திருவாளர்கள் பி. ஏ. தங்கசாமி, எம். செல்லப்ப பிள்ளை, ஆர். தண்டபாணி, (இரே. இளம்வழுதி) ஆகியோர் குறுக்கு விசாரணை செய்தார்கள்.

1-வது வட்டம் தி. மு. கழகம்

சென்னை, டிச. 29—

27—12—53ல், கழகக் கட்டிடத்தில் தோழர் பொ. சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: வ. கண்ணன்; துணைச் செயலாளர்: ஆர். இராமதாஸ்; பொருளாளர்: க. பட்டாபி; மாவட்ட உறுப்பினர்கள்: ஆர். இராமதாஸ், க. பட்டாபி.

19-வது வட்டம் தி. மு. கழகம்

சென்னை, டிச. 29—

20—12—53ல், தோழர் ஏ. கே. சாமி அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர்கள் மு. மூர்த்தி செயலாளராகவும், மு. சண்முகம் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்பு, தூத்துக்குடி நிதிக்காக வீதிதோறும் சென்று உண்டியல் வசூலிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

கோவாண்டகுறிச்சியில் தி. மு. கழகம் துவக்கம்

20—12—53ல், தோழர் அ. தம்புசாமி தலைமையில் இவ்வூரில் தி. மு. கழகத் துவக்கவிழா நடைபெற்றது. பின்னர், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:- செயலாளர்: ஆ. அரைராஜன்; துணைச் செயலாளர்: ஆ. சின்னையா; பொருளாளர்: சவரிமுத்து; மாவட்டப் பிரதிநிதி: வை. கலியமூர்த்தி; மேலும் ஒன்பது பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

திண்டிவனம்

16—12—53-ல், திண்டிவனம் தி. மு கழக நகரக் கிளை உறுப்பினர்கள் கூட்டம், தோழர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள்: பாண்டுரங்கன், பக்கிரிசாமி ஆகியவர்களை செயற்குழு உறுப்பினர்களாகவும், தோழர் தி. க. குமாரசாமியை செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தி. மு. கழகச் செயற்குழுத் தேர்தல்கள்

★

உறந்தை

6—12—53-ல், தோழர் கா. பாண்டியன் முன்னிலையில், செயற்குழு தேர்தல் நடைபெற்றது. செயலாளர்: தோழர் சி. மாரியப்பன்; துணைச் செயலாளர்: தோழர் ஏ. கே. சாமி; பொருளாளர்: தோழர்: டபிள்யூ. என் சேகர்; நகரக் கிளைப் பிரதிநிதிகள்: ஏ. சின்னையா; எஸ். குழந்தை; செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள்: எ. சின்னையன், கே ராஜு, அன்புமணி, ராமமூர்த்தி, கு. நடராசன், எஸ். குழந்தைவேலன், தாமோதரன், அரங்கண்ணல், குடிலன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

குரும்பேரி

20—12—53-ல், கழக அலுவலகத்தில், வடஆற்காடு மாவட்ட செயலாளர் தோழர் ஏ. எல் சி. கிருஷ்ணசாமி தலைமையிலும், தோழர் அரங்கண்ணல் முன்னிலையிலும் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர்கள்: மா. மாரப்பன் செயலாளராகவும், கே. எஸ். ரத்தினவேலு துணைச் செயலாளராகவும், வி அருணாசலம் பொருளாளராகவும், மா. மாரப்பன் மாவட்டப் பிரதிநிதியாகவும் செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள்: செங்கல்வராயன், கந்தப்பன், சின்னராஜி, கோவிந்தராஜி, பி. அருணாசலம் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

• • •

அன்று இரவு 7-30 மணிக்கு, தோழர் டி. அண்ணாமலை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள்: என். எ. சாமி, க. செஞ்சோழன், மா. மாரப்பன், ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, அரங்கண்ணல் ஆகியோர் பேசினர்.

வைத்தீஸ்வரன் கோயில்

6—12—53-ல், தோழர் வை உத்திராபதி தலைமையில், நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், புதிய ஆண்டுக்கு நிர்வாக குழுவினராகத் தோழர்கள்: அ. வீ. முத்துகிருஷ்ணன் செயலாளராகவும், அ ச. வை. முருகையன், துணைச்செயலாளராகவும், த. இராமசாமி பொருளாளராகவும், வை. உத்திராபதி மாவட்டப் பிரதிநிதியாகவும். செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள்: இரா. முத்தையன், வீ. இலக்குமணன், இரா. கோவிந்தராசன், செ கன்னையன், இரா. சுப்பையன், எ. எம். துரை, மு. பிச்சமுத்து, வடபாதி இராமையான், என் கிருஷ்ணமூர்த்தி, வி பாலகிருஷ்ணன், எஸ். பூராசாமா, டி. கோவிந்தராசு, இரா. இராமச்சந்திரன், பி. சம்மந்தம், எம். சம்மந்தம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சேலம்

20—12—53-ல், 8-வது வார்டு தி. மு. க. கிளைக் கழக அமைப்புக் கூட்டம், தோழர் இ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள்: பி. தங்கவேலு செயலாளராகவும், சி. தங்கவேலு துணைச் செயலாளராகவும், எஸ். டி. [illegible] பொருளாளராகவும், நகரக் கிளைப் பிரதிநிதிகளாக எஸ். டி. [illegible] தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பழனி

19—12—53-ல், பழனி கிளை தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டம், தோழர் வெ. தியாகராசன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள்: செ. துரைஅரசு செயலாளராகவும், கா. வெங்கடாசலம் துணைச் செயலாளராகவும், வெ. தியாகராசன் பொருளாளராகவும், பரமசிவம் விளம்பர உறுப்பினராகவும், பி. எஸ். ஷேக், கன்னையன் மாவட்டப் பிரதிநிதிகளாகவும், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள்: எஸ் செங்கசாமி, கே. கருப்புச்சாமி, ஜே. பி. சுப்புரும், எஸ். குமார், பி. பெருமாள், அ. தமிழரசு, காளிமுத்து, பச்சை, அ. அசன்முகம்மது ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மணப்பாறை

21—12—53-ல் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பி. எம். மாராச்சி செயலாளராகவும், என். வடிவேலன் துணைச் செயலாளராகவும், பி. வி. என். கோபால கிருட்டிணன் பொருளாளராகவும், பி. கஸ்தூரிராஜு மாவட்டப் பிரதிநிதியாகவும், கல்லக்குடி அறப்போரில் 6 மாதக் கடுங்காவல் தண்டனை அனுபவித்த தோழர் வி. எஸ். குமாரவேலன், சிறைவாசத்தின் காரணமாக நோயுற்றிருப்பதால் அவருக்கு உதவி புரிவதற்காக தோழர்கள்: மீ. சு. இளமுருகு - பொற்செல்வி, பி. எம். மாராச்சி, பி. வி. என். கோபாலகிருட்ணன், பி. கஸ்தூரிராசு, எம். என். ராஜகோபால், என். எம். தங்கவேல், மாணுங்குன்றம் துரைசாமி, ராமகிருஷ்ணன் ஆகியோர்களடங்கிய நிதிக்குழு நிறுவப்பட்டது.

பாண்டமங்கலம்

இவ்வூர் தி. மு. கழகக் குழுவிற்கு, தோழர்கள்: கே. சின்னக்குட்டி செயலாளராகவும், கீ. வணங்காமுடி துணைச் செயலாளராகவும், எஸ். பழனியப்பன் பொருளாளராகவும், ஆ. வீரபத்திரன் மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பறங்கிப்பேட்டை

தோழர் சம்பந்தமூர்த்தி கடையில், தோழர் இரா. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இவ்வூர் தி மு. கழக செயற்குழு கூட்டத்தில், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: எம். எம். முஸ்தபா செயலாளராகவும், எஸ். கே. சாமி துணைச் செயலாளராகவும், எஸ். சுப்புராயன் பொருளாளராகவும், பி. வி. சீநிவாசன் மாவட்ட உறுப்பினராகவும், மற்றும் 12 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தாலிகட்டிபாளையம்

இவ்வூர் தி. மு. கழகத் தேர்தல், தோழர் ப. முத்து தலைமையில் நடைபெற்றது, அவ்வமயம், சி. நடராசன் செயலாளராகவும், சி. செல்லப்பன் துணைச் செயலாளராகவும், பொ. சின்னப்பன் பொருளாளராகவும், சா. சைத்தமலை மாவட்டப் பிரதிநிதியாகவும், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள்: சு. பழனியப்பன், க. அர்த்தநாரி, ப. முருகேசன், ப. முத்து, க. சுப்ரமணியம், ர. ஆறுமுகம் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பிள்ளாதுரை

20—12—53-ல், பிள்ளாதுரை தி. மு. க. பொது உறுப்பினர்கள் கூட்டம் கு. பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள்: க. சிதம்பரம் செயலாளராகவும், கு. பழனியப்பன் துணைச் செயலாளராகவும், செ. வெங்கடாசலம் பொருளாளராகவும், மு. சுபேந்திரன் மாவட்டப் பிரதிநிதியாகவும், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள்: அ. காச்சிமுத்து, [illegible] பாண்டி, வீ. எஸ். மணி, [illegible] முருகேசன், அ. இருளப்பன், [illegible] அங்கப்பன், சி. ஆறுமுகம் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

'ஜனநாயக எதிரி நம்பர்-1'

இந்திய அரசியல் சட்டத்தை மீறுகிறார்

சி. ஆர். மன்னிப்பு

சென்னை, டிச. 28—

நடப்பு நிதி ஆண்டின் இரண்டாவது பகுதி வரவு—செலவுத் திட்டம் மேல்சபையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

மேல் சபை எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அனைவரும், அரசாங்கத்தைக் கண்டித்துப் பேசினார்கள்.

வரவு—செலவுத் திட்டத்தை இரண்டு சபைகளிலும் ஒரே நேரத்தில் கொண்டு வந்திருக்க வேண்டும்," என்று புகார் தெரிவித்தனர் கூறினர்.

எதிர் கட்சித் தலைவர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சட்டசபையில் செலவின நிதி மசோதா நிறைவேறிய பின், அதை இங்கு விவாதிப்பதினால் எந்தவிதமான பயனுமில்லை; இச் சபையின் பயனையும், கவுரவத்தையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும். தற்போது இச்சபையில் நடக்கும் விவாதம், டென்மார்க் இளவரசர் இல்லாமல், 'ஹாம்லெத்' நாடகம் நடிப்பது போல் எனக்குத் தோன்றுகிறது. இங்கு விவாதிப்பதின் மூலம் இச்சபை கூறும் குறைகளையும், யோசனைகளையும் கீழ்ச் சபை கேட்டுப் பயனடைய முடியாமல் போய்விட்டது. கீழ்ச் சபையில் செலவின மசோதா நிறைவேறிய பின், இத்திட்டம் பற்றிய விவாதத்தில் எதிர்க்கட்சியினர் அக்கறை காட்டவில்லை என்பதை அரசாங்கம் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த அம்சத்தை தன் எதிர்காலத்தில் விடயமாக முழுவதையும் சர்க்கார் பரிசீலனை செய்யுமென்று நான் எண்ணுகிறேன்." என்றார்.

அடுத்து, கே. பாலசுப்ரமணிய அய்யர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"வரவு-செலவுத் திட்டத்தை இச் சபையில் [illegible] அரசாங்கத்தின் செயல், [illegible] மையானது, தவறு என்று கூறுகிறேன், இம்முறை அரசியல் சட்டத்திற்கு முரணானது," என்றார்.

பின்னர் பேசிய வி. கே. ஜான் குறிப்பிட்டதாவது:

"வரவு-செலவுத் திட்டத்தை இரு சபைகளில் [illegible] மேல் சபையைக் கவனிக்கவில்லை என்பது [illegible] அரசாங்கம் [illegible] முறை, அரசியல், சட்டம், சம்பிரதாயம், நடைமுறை ஆகியவைகளுக்கு மட்டுமின்றி சபையின் கவுரவத்திற்கும் எதிராக இருக்கிறது. இம்முறை சட்ட விரோதமானது" என்றார்.

முதல் மந்திரி ஆச்சாரியார் பதிலளிக்கையில் கூறியதாவது:

"தற்போதுள்ள திட்டம் [illegible] கோரிக்கை [illegible] முறையிலிருப்பதால்தான், [illegible] இரு சபைகளிலும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. செலவின நிதி ஒதுக்கியதில் பெரும் பகுதி செலவிடப்பட்டுவிட்டது. ஏற்கனவே நடைமுறையில் இருந்து வருகிற துறைகளில் தொடர்ந்து சேவை செய்யவே இத் திட்டம் கொண்டு வரப்பட்டது. இத் தடவை அரசாங்கம் நடந்து கொண்ட முறைக்காக நான் மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்." என்றார்.

சென்னை மிருகக் காட்சிசாலைக்கு......

சென்னை, டிச 29—

ரஷ்யாவிலிருந்து 4 [illegible] கப்பல் மூலம் இன்று சென்னை வந்து சேர்ந்தன. இவற்றில், இரண்டு கரடிகள் சென்னை மிருகக் காட்சி சாலையில் வைக்கப்படும்.

[illegible] பிரதேசத்தில் வாழும் 3 [illegible], 4 ரஷ்யக் கரடிகள், தென் அமெரிக்கக் குரங்குகள் ஆகியவை இன்று கப்பல் மூலமாக சென்னைக்குக் கொண்டு [illegible]. மற்றும் சில [illegible] சேர்ந்தன. இவைகளில் ஒருசிலவற்றை சென்னை மிருக காட்சிசாலையில் வைக்கப்படுமெனத் தெரிகிறது.

கழகக் கூட்டம்

மூலக்கொத்தளம் முல்லைவாங்கல்

தி. மு. கழக துவக்க விழா

4—1—54 மாலை 5-30 மணிக்கு

இடம்:

பங்களாப்பேட்டைத் திடல்

தலைவர்: எம். கே. தாமோதரன்

பேசுவோர்:

[illegible] மாணிக்கம்

[illegible] அருகநாதன்

ஜே. எம். ஜேம்ஸ் வில்லியம்

[illegible] ஷெருபுதீன்

குறிப்பு:—அன்று இரவு, பின்னைக் [illegible]களுக்கு உண்டி அளிக்கப்படும்.

கிழக்கிலேயே மிகப்பெரிய ரப்பர் தொழிற்சாலை

கொழும்பு, டிச. 30—

இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட [illegible] நவீன சாதனங்கள் கொண்ட ரப்பர் தொழிற்சாலை, கிழக்கிலேயே மிகப் பெரிய தென்று கூறப்படுகிறது. பத்து லட்ச ரூபாய் செலவில் இத் தொழிற்சாலை அமைக்கப் பட்டது.

ஏழைகளுக்கும் கதகதப்பான உடை!

கல்கத்தா, டிச. 30—

சணல் அணிகளை கம்பனியாகச் செய்யும் முறை குறித்து ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இம்முறை வெற்றிபெற்றால் ஏழைகள் கதகதப்பான உடைகளை அணியும் வழி ஏற்படலாம்.

பெரியா சுடப்பட்டது — இப்போதல்லவாம்!

—(:)—

வழக்கு விசாரணை என்பதெல்லாம் புனைக் கதையாம்!

அமெரிக்காவின் சாடு!

வாஷிங்டன், டிச. 29—

ரஷ்ய மாஜி உள்நாட்டு மந்திரி லெவரண்டி பெரியா சுடப்பட்டது இப்போது நடைபெற்ற தல்லவென்றும், ஸ்டாலின் மறைவுக்குப் பின் நடந்துவிட்டதெனவும், கைது-விசாரணை-தண்டனை யெல்லாம் வெறும் கட்டுக்கதை என்றும் பெரியாவின் பிறந்த இடமான ஜார்ஜியாவிலிருந்து இங்கு தகவல் கிடைத்துள்ளது.

இதை நம்பும்படி செய்வதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது.

பெரியா கைது செய்யப்பட்டு, விசாரணை நடத்தியதை யாரும் பார்த்ததுமில்லை; கேள்விப்படவுமில்லையெனக் கூறப்படுகிறது.

ஸ்டாலின் மறைவுக்குப் பின் மாலென்கோவ், மாலடோவ், பெரியா, பல்கானின் ஆகியோர் கிரெம்ளினில் கூடிப்பேசியதாகச் சொல்லப்படுகிறது.

அப்போது, பெரியாவுக்கு எதிராக மற்ற மூவரும் கூடி தீர்மானித்தனர்; பெரியா விரும்பாது, விவாதத்தின் நடுவே எழுந்து கையிலிருந்த துப்பாக்கியை எடுத்து நீட்டியதாகச் சொல்லப்படுகிறது. இதைப் பார்த்தவர் கொண்டிருந்த மெய்க்காப்பாளர்களில் ஒருவர், உடனே பெரியாவைச் சுட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. —ரேபன்.

பட்டிவீரன்பட்டியில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

27—12—53 மாலை 6 மணிக்கு, பட்டிவீரன்பட்டியில், தி. மு. கழகச் சார்பில், தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பண் பாடினர்.

தலைவர் முன்னுரையாக, தி.மு. கழகப் போராட்டங்களையும், ஆச்சாரியார் சர்க்காரின் ஜனநாயகமற்ற போக்கை விளக்கியும், புதுக் கல்வித் திட்டம்—கிராம மக்களை குலத் தொழில் செய்யும்படி தூண்டும், வர்ணாச்சிரமத் திட்டத்தைப் பாதுகாக்கத்தான் பயன்படும் என்றும் விளக்கமாகப் பேசினார்.

பின்னர், தோழர் அ. பொன்னம்பலனார், நமது மூன்று போராட்டங்களையும், அதில் நம் தோழர்கள் காட்டிய வீரம், ஊக்கம், உறுதி பற்றியும், ஆச்சாரியார் அடக்குமுறை பற்றியும் பேசினார்.

தோழியர்கள் அருண்மொழி, பி. ஒ. எல்., பூங்கோதை ஆகியவர்கள், 'திராவிட நாடு திராவிடருக்கே,' என்ற நாட்டுரிமைக் கிளர்ச்சியை இனி எவராலும் அடக்கிவிட முடியாதென்றும், எதிர்ப்புச் சக்திகளிடையில்தான் தி. மு. கழகம் வளர்ச்சியடைந்திருக்கிறது என்றும் குறிப்பிட்டனர். தூத்துக்குடி வழக்கு நிதிக்காகப் பொதுமக்கள் பெருநிதி கொடுத்து உதவும்படி கேட்டுக்கொண்டனர்.

பொதுக்கூட்டத்தில் உண்டியல் மூலம் வசூல் ரூ. 95—4—0; 5 பூமாலைகள் ஏலம் விடப்பட்டதில் ரூ. 10—12—0; பட்டிவீரன்பட்டி தோழர் டி. என். என். மீனாட்சிசுந்தரம் ரூ. 5—0—0 தோழர் என். பாண்டியராஜன் ரூ. 1—0—0; பழைய வத்தலக்குண்டு தி. மு. கழகம்—தோழர் மாணிக்கம் மூலம் ரூ. 5—8—0 ஆக 117—8—0 ரூபாயை, செயலாளர் தோழர் கே. நடராஜன் அவர்களால், தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்களிடம் தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்காக அளிக்கப்பட்டது.

காந்தாரில் தோழரின் ரத்த காணிக்கை

தி. மு. கழகத் தோழர் கத்தியால் குத்தப்பட்டார்

[illegible], டிச. 30—

27—12—53 மாலை 6-30 மணி அளவில், [illegible] சுப்பிரமணிய நகிருர் திடலில், தோழர் [illegible] தலைமையில், [illegible] தி. மு. கழகத் துவக்க விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் [illegible] பி. சன்பாட்சன் அவர்கள், நிகழ்ச்சி தி. மு. கழகத் [illegible] கொள்கைகளை பற்றியும், [illegible] வளர்ச்சி பற்றியும், [illegible], எட்டயபுரம் தோழர் [illegible] கலிங்கன் இன்றைய அரசியல் பற்றியும், கழக வளர்ச்சி பற்றியும் பேசிக்கொண்டிருக்கும் போது, சில காங்கிரஸ் காலிகளால் ஒரு பெரிய கல், மேடை மீது வீசப்பட்டு, கீழே விழுந்தது. அப்போது, கல் எறிந்த 'தோழரை', தோழர் மரியலூர்து என்பவர் பிடிக்க ஓடியபொழுது, மாற்றுக் கட்சியினர் சிலரால் கத்தியால் நெற்றியில் குத்தப்பட்டு, காயம் ஏற்பட்டது. உடனே போலீஸ் படையினரும், ரிசர்வ் போலீஸ் படையினரும் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்து வந்து, அமைதியை நிலை நாட்டி, கலகம் விளைவித்தவர்களை கைது செய்து சென்றிருப்பதாகத் தெரிகிறது.

பின்னர், மதுரைத் தோழர் சுல் முத்து, அச்சம்பவம் பற்றியும், தற்கால அரசியல் நிலை பற்றியும், மதுரைச் சம்பவங்கள் பற்றியும், நீண்டநேரம் சொற்பொழிவாற்றினார்.

பின்னர், கத்திக் குத்து வாங்கிய தோழர் மரியலூர்து என்பவரை மேடைமீது ஏற்றி மக்களுக்கு அறிமுகம் செய்தனர்.

கூட்டத்தில், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

தேயிலைப்பான பவுடர்!

லண்டன், டிச 30—

தேயிலை, சர்க்கரை, பால் இம் மூன்றும் கலந்த பொடியொன்று இங்கு பரிட்சிக்கப்பட விருக்கிறது. இப்பொடியில் வெந்நீரை ஊற்றினால் தேயிலைப் பானமாக மாறிவிடுகிறதாம்.

எல்லா சாகுபடி நிலங்களுக்கும் பாசன வசதி

கொழும்பு, டிச 30—

இலங்கையிலுள்ள எல்லா சாகுபடி நிலங்களுக்கும் பாசன வசதி செய்ய இலங்கை சர்க்கார் முயற்சி செய்து வருகிறது. இதுவரை 215 திட்டங்களுக்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது.

சர்க்காருக்கும் கம்யூனிஸ்ட்டுகளுக்கும் இடையேயுள்ள தொடர்பு? — சர்க்காருக்கும் கம்யூனிஸ்ட்டுக்கும் இடையாதாம்!

ஆனால் தி. மு. கழகத்தினரை மட்டும் விடுவிக்க முடியாதாம்!

ஆச்சாரியார் சண்டித்தனம்

சென்னை, டிச. 30—

"சிறைப்படுத்தப் பட்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரை விடுவிப்பது குறித்து, ஜனாப் அப்துல் சலாம் கேட்ட கேள்விக்கு, இன்று மேல்சபையில் சி. ஆர். பதிலளிக்கையில், 'எக்காரணம் கொண்டும் சர்க்கார் சதி வழக்குகளை வாபஸ் பெறுவதென்பதும், குற்றங்களைக் கவனிப்பதில், சர்க்கார் இவ்விதக் கிளர்ச்சிகளைக் கவனிக்காது," என்றும் குறிப்பிட்டார்.

தோழர் என். பி. ஆதித்தனின் கேள்வி ஒன்றிற்குப் பதில் அளிக்கையில், "....பரிசீலிக்கப்படுமளவுக்கு, சர்க்கார், கல்நெஞ்சம் படைத்ததல்ல," என்று ஆச்சாரியார் பதிலளித்திருப்பது, இங்கு குறிப்பிடத்தக்கது.

தீண்டாமையை ஒழிக்க மசோதா

புதுடெல்லி, டிச. 30—

தீண்டாமையைத் தடை செய்யும், தீண்டாமை காரணமாகப் பிறருக்குத் தொல்லைகள் தருவோருக்கு தண்டனை விதிக்கும் ஒரு மசோதா இன்று இந்திய சர்க்காரின் விசேட கெஜட்டில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது.

மசோதா, மக்கள் சபையின் அடுத்த கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படும்.

ஜம்மு—காஷ்மீர் நீங்கலாக இந்தியா முழுவதும் இது [illegible] கெஜட்டில் [illegible] குறிப்பிடப்படும் தேதியிலிருந்து இச்சட்டம் அமுலுக்கு வரும்.

தீண்டாமையைக் கடைப்பிடிப்போருக்கு 6 மாதசிறை அல்லது ரூ. 500 அபராதம் விதிக்கப்படும்.

கம்யூனிஸ்டு கட்சி மனமாற்றம் கண்டு சி. ஆர். பரவசம்

நான்கு வழக்குகளை வாபஸ் வாங்கினதற்கு பிரதமர் கூறும் சமாதானம்!

சென்னை, டிச. 30—

இன்று காலை, சென்னை மேல் சபையில் ஜனாப் எம். கே. எம். அப்துல் சலாம் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், ஆச்சாரியார் கூறியதாவது:

"1952 ஏப்ரல் முதல், 1953 செப்டம்பர் வரை நான்கு சதி வழக்குகளை சர்க்கார் வாபஸ் பெற்றிருக்கிறது; காரணம், இச் சதிவழக்குக் குற்றவாளிகளின் அரசியல் கட்சிகளின் இன்றைய போக்குதான்! பலாத்காரத்தைக் கைவிட்டு சட்டசபையிலும், பத்திரிகைகளிலும், பிரசங்க மேடைகளிலும் பிரச்சார வேலைகளில் அக்கட்சியினர் இறங்கியிருக்கின்றனர். ஆகவே, அவ்வித அமைதியான வழியிலேயே அவர்கள் நீடிக்க ஊக்கமளிப்பதற்காகவே இக் குற்றவாளிகளுக்குக் கருணை காட்டுவது நல்லதெனக் கருதி சர்க்கார் வழக்குகளை வாபஸ் பெற்றது," என்றார்.

அஸ்ஸாமில் சிமெண்டு தொழிற்சாலை

கௌஹாத்தி, டிச. 30—

அஸ்ஸாமில், 'போகாஜன்' என்ற இடத்தில், சிமெண்டு தொழிற்சாலை ஏற்படுத்தப்பட விருக்கிறது. இதை ஏற்படுத்த ஒரு கோடி ரூபாய் செலவாகும் எனத் தெரிகிறது.

உலகிலேயே மிகவும் மலிவான கார்

லண்டன், டிச. 30—

உலகிலேயே மிகவும் மலிவான கார் பிரிட்டனில் 300 பவுனுக்கு விற்கப்படும். இக்கார் காலனுக்கு 50 மைல் ஓடுமாம்!

திராவிட முன்னேற்றக் கழக அச்சக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.